# நற்றிணையில் வேளாண்மையும் பண்பாடும்

***முனைவர் போ. அனு***
இணைப்பேராசியர், தமிழ்த்துறை
பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383057

***முன்னுரை***

*தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதற்கும், மகிழ்விப்பதற்கும் எழுந்தது என்றாலும், அறிவியல் செய்திகளை அறிவிப்பதும் இலக்கியங்களின் நோக்கங்களாக இருந்திருக்கின்றன. அனுபவ நிலையோடு இணைந்த இயற்கை அறிவியல் நுண்ணறிவை அக்கால மக்கள் பெற்றிருந்தனர். இதற்குச் சான்றாக சங்க பாடல்கள் விளங்குவதை உணரமுடிகிறது. இன்றைய அறிவியலாளர் கூறும் அறிவியல் சார்ந்த பன்முகக் கூறுகளை சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களில் காணமுடிகிறது. அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களுள் ஓன்றான நற்றிணையில் இடம் பெற்றுள்ள வேளாண்மை, பண்பாட்டுச் செய்திகளை எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.*

**சங்ககால மக்களின் சமூக வாழ்க்கை**

*பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தினர். அதில் உழைப்பு முக்கிய பங்கு வகித்தது. காலம் செல்லச் செல்ல சமூக வேற்றுமைகள் பெருகின. இயற்கையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வாழ்ந்த சங்ககால மக்களைத் தொழில்கள் வேறுபடுத்தின. சங்ககாலச் சமூகத்தில் சுடம்பன், தச்சன், கொல்லன், பாணன், பறையன், கூவலன், காரோடன், மீனவன் முதலிய தொழில் பிரிவினர் இருந்தனர்.*

*சங்க கால சமூகம் மனிதன் உயர்ந்து விளங்குவதற்கான சில அடிப்படை கோட்பாடுகளை தனித்துவமாக உருவாக்கி அதனை இலக்கியம் வழி போற்றிக் காத்து நின்றது. இக்கோட்பாடுகள் பின்வரும் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக விளங்கின. சங்க கால சமுகத்தைப் பற்றி அறிந்து கொள்ள சங்க இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன சங்ககால வாழ்க்கை முறையில் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் போற்றியதை அறிய முடிகிறது. நானிலத்து நால்வர்களுக்குள்ளே (வேட்டுவர், ஆயர், உழவர், மீனவர்) தற்காப்புக்காகத் தலைவன் (வேந்தன்), அறம் பேணித் தவம்நாடிய அந்தணன். கல்வியும் அறவழிச்சமய ஈடுபாடும் கொண்ட அறிவர்களாகிய பார்ப்பார் இருந்தனர். மற்றவர்கள் சாதாரண நிலையில் இருந்தனர். அவரவர் வாழ்ந்த இயற்கைச் சூழல் அனுமதித்த தொழிலைச் செய்து வாழ்ந்தனர். தமிழ்ச் சமுதாயம் தனிச்சமுதாய அமைப்பிலிருந்தது. அதுவே திணைச் சமுதாய அமைப்பாகும். திணைகள் ஐந்தெனினும் நிலையான திணைகள் நான்கு. சமுதாய முறைமை வழக்கெனச் சொன்னபோது நால்வர்க்கும் உரியது என்றனர் பண்டைத் தமிழர். அன்றாட வாழ்க்கை இடத்துக்கிடம் மாறுபட்டிருந்தது. தொழில் அம்மாறுபாட்டுக்கு வழி வகுத்தது.*

*“இயற்கையுடன் தொடர்பு கொள்ளும் மக்களுக்குள் மட்டுமே இயற்கை மீது நேசத்தைப் பிறப்பிக்க முடியும். இயற்கையைப் பாராட்டுவதிலும், அதன்மீது நேசம் கொள்வதிலும் மக்களும் கவிஞர்களும் ஒருவர் மீது ஒருவர் செல்வாக்குச் செலுத்தியுள்ளனர்.*

*இயற்கையுடன் நெருங்கியிருந்த ஒரு நாட்டு மக்களிலிருந்துதான் பழங்கவிஞர்கள் தோன்றினர். அவர்கள் எழுதியவற்றிலிருந்து இயற்கை மீதான மக்களின் உற்சாகமும் தூண்டப்பட்டது" (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், ப. 21) என்ற தனிநாயக அடிகளின் கருத்து இங்கு ஒப்பிடத்தக்கது.*

**நிலம்சார் பண்பாடும் தொழில்களும்**

*கலை, உணவு, பழக்கவழக்கம், நம்பிக்கை ஆகிய தனிச்சிறப்பு மிக்க கூறுகளின் அடிப்படையில் அமையும் மக்களின் வாழ்க்கைமுறையே பண்பாடு. ஒவ்வொரு இனக் குழுவுக்கும் தனிப்பட்ட சிறப்புகள் பண்பாட்டில் உண்டு. அதில், தமிழர் பண்பாடு இயற்கையோடு மிகவும் நெருக்கமானது. மக்களின் வாழ்க்கைக்கு உணவு, உடை, வீடு இன்றியமையாதன. இவற்றில் வெளிப்படும் பண்பாடே பிற இனக்குழுவிலிருந்து ஒரு இனத்தை மேம்பட்ட மற்றும் சிறப்புமிக்க இனமாக அடையாளம் காட்டும். இவை யாவுமே நிலத்தையும் தொழிலையும் சார்ந்து அமைவது என்றால் அது மிகை அல்ல.*

*மலைகள், ஆறுகள் போன்ற இயற்கை அமைப்புகள் மிகத் தெளிவாக எல்லைவகுக்கும் தென்னிந்திய நிலத்தோற்றத்தின் பௌதிக அமைப்பு, தென்னிந்தியாவின் சிறிய அரசுகள், இன்னும் சிறிய குறுநிலத் தலைவர்கள் ஆண்ட சிறு பகுதிகள் ஆகியவற்றிற்கு இடம் தந்தது. அது மட்டுமல்லாமல் கவிதையையும் நிலவியல்பகுதிகளுக்கேற்பமலைப்பாங்கான நிலத்துக் கவிதை, மேய்ச்சல் நிலக் கவிதை, கடற்கரைப்பகுதிக் கவிதை என்பதுபோலப் பகுக்க வாய்ப்பளித்தது. (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும். ப. 3) என்ற கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.*

**வேளாண் தொழில்நுட்பம்**

*வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் ஆகும். தீம்புனல் உலகமாகிய மருத நிலத்தில் நாகரிகம் தோன்றி வளர்ந்தது என்று வரலாறு கூறுகிறது. ஏனென்றால் ஆற்றங்கரையும், ஏரிக்கரையுமாகிய நீர் வளமுள்ள மருத நிலத்திலே தான் உணவுப் பயிர்கள் பயிராயின. உணவு தட்டுப்பாடின்றிக் கிடைத்த இவ்விடங்களிலே மக்களின் நாகரிகம் தோன்றி வளர்ந்ததாக அனைவரும் கூறுகிறார்கள். வளமான நிலத்தைக் கொண்ட மருத நிலத்தில் மக்கள் தங்களின் இன்றியமையாத தொழிலான உழவுத் தொழிலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். மருத நிலத்தில் கிடைத்த நீர்வளமும் நில வளமும் அவர்களுக்குத் தேவையானதை விட மிகையான உணவு உற்பத்திக்கு வழிவகுத்தது.*

*உழுதல் என்பது நிலத்தை பண்படுத்துவதாகும். பயிர்த் தொழிலுக்கு பருவம் பார்த்து பயிர் செய்தல் முக்கியமாகும். எனினும் நன்செய் பயிர்கள் நீர்வளம் மிகுதியாக இருக்கும் பகுதிகளில் ஆண்டு முழுமையும் விளைவிக்கப்பட்டன. வயல்களில் நாற்று நடுவதற்கு முன் நிலத்தை பலமுறை ஒருவர் நிலத்தை உழுவதற்கு எருதுகளை மட்டுமின்றி எருமைகளை கொண்டு உழுவது என்பதை*

***"மலை கண்டன்ன நிலை புணர் நிவப்பின்***
***பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ"***

***(நற்றிணை 60)***

*என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. மேலும் பண்டைய உழவர்கள் நிலத்தின் தன்மையை நன்றாக அறிந்து மழைக்காலத்திலும் அதன் பின்னரும் உழுது விலைப் பொருட்கள் விதைத்தனர் என்பதை அறிய முடிகிறது*

**எரு இடுதல்**

*மண் பலமாக இருக்க வேண்டும் ஆனால் நம் மண்ணில் எருவிட வேண்டும் அப்போதுதான் நிலம் நல்ல சத்துக்களை கொண்ட நிலமாக விளங்கும் அப்போதுதான் பயிர்கள் நன்கு விளையக்கூடியதாக இருக்கும் என்பது உண்மையானது ஆகும். பண்டைய உழவர்கள் தங்கள் பயிர் செய்யப்பட்ட நிலங்களில் கால்நடைகளை*

*கழிவுகளை எருவாக்கி விட்டனர் மேலும் கால்நடைகளின் சாணத்தை தாவேறு என்று குறிப்பிட்டனர் இதனை*

***இரும்புனிற்று எருமைப் பெருஞ்செவிக் குழவி***
***பைந்தாது எருவின் வைகுதுயில் மடியும்***
***செழுந்தண் மனே. (நற்றிணை 271)***

*என்ற பாடல் வரிகள் எரு இடுவதை காட்டுகின்றன.*

**பாத்தி கட்டி நீர் பாய்ச்சுதல்**

*நீர் இன்றி அமையாது உலகம் போல என்ற நற்றிணை வரியில் தமிழன் நீரை எவ்வண்ணம் போற்றினான் என்று அறிய முடிகிறது. நீர்ப்பாசனம் பண்டைய தமிழகத்தில் மிகவும் முக்கியமாக கருதப்பட்டது. குளங்கள், ஏரிகள், அணைகள் மூலம் நீரை சேமித்தனர். நீர்தேக்கங்களில் சேமிக்கப்படும் நீர், பாசன வசதிக்காக கால்வாய்கள் மூலம் விவசாய நிலங்களுக்கு கொண்டுவரப்பட்டன. மேலும் அந்த காலத்தில் கிணறு வெட்டி நிலத்தடி நீரை பயன்படுத்தவும் மக்கள் கற்றுக் கொண்டிருந்தனர். பண்டைய உழவர்கள் விளைநிலங்களில் நீரானது சீரான முறையில் பயிர்களுக்கு சேர்வதற்கு நிலத்தில் பாத்தி கட்டி நீர் பாய்ச்சினர். மருதநிலமானது நல்ல நன்னீர் பகுதிகளை கொண்டதாகும். இங்கு கரும்பு நெல் வாழை போன்ற பயிர்கள் பயிர் செய்யப்பட்டன மருதநிலத்தில் குளத்தின் கன்மாய் திறக்கப்பட்டு மடைத்திறந்து நீரானது வெளியேறி கால்வாயை அடைந்து அதன் வழியே சேர் உடைய வயலுக்கு சென்று பாய்ந்ததை*

***"படை மாண் பெருங் குள மடை நீர் விட்டென,***
***கால் அணைந்து எதிரிய கணைக் கோட்டு வாளை***
***அள்ளல்அம் கழனி உள்வாய் ஓடி"***
***(நற்றிணை 340)***

*என்ற பாடல் வழி அறியலாம். மேலும் குளத்திலிருந்து கிணற்றிலிருந்து ஏற்றம் அம்பு, கிடா போன்ற கருவிகள் கொண்டு நீர் இறைத்து பாய்ச்ச பட்டதையும் நற்றிணையில் காட்டியுள்ளன.*

**பயிரிடல் (விதைத்தல்)**

*பண்டைய காலத்தில் புன்செய் நன்செய் நிலங்களுக்கு ஏற்ப பயிரிடும் முறைகளை உழவர்கள் கையாண்டு உள்ளனர். புன்செய் நிலங்களில் விதைகளை அப்படியே விதைத்தல் நன்செய் நிலங்களிலும் நெல்லை நாற்று விட்டு நடவு செய்தல் மற்றும் மற்ற பயிர்களையும் பயிரிட்டு உள்ளது. புன்செய் நிலங்களான குறிஞ்சி முல்லை நிலங்களை தினை வரகு ஐவனின் மேல் பயிறு உளுந்து போன்ற பயிர் விதைகள் விதைக்கப்பட்டது. கட்டாந்தரையில் விதைகளைப் போட்டால் பறவைகள் அவற்றைப் பொறுக்கித் தின்றுவிடும். எறும்புகள் இழுத்துச் சென்றுவிடும் என்பதால் நிலத்தைக் குச்சியால் கீறி விதையினை முதன்முதலாக விதைத்தனர். இவ்வாறு விதைப்பதால் மழைநீர் விதைகளை அடித்துச் செல்வது இல்லை. எனவே நிலத்தைக் கிளறி புழுதியாக்கி அப்புழுதியில் விதைகளை விதைக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தனர். விதைகளை ஒரே இடத்தில் விதைக்காமல் பரவலாக விதைத்துள்ளனர்.*

*இதனை, சிற்சில வித்தல் பற்பல விளைந்து (நற்றிணை.பா.93), சிலவித்து அகல இட்டெ பலவிளைந்து (நற்றிணை.பா.209) என்ற பாடல் அடிகள் விவரிக்கின்றன.*

***விதையர் போன்ற முதையல் பூழி***
***(நற்றிணை 121)***

*வேளாண் மக்கள் விதைநிலை மாற்றங்களிட்டு அதன் நன்றாக வளர்ந்த பின் அந்நாற்றைப் பறித்து*

***கவர்படு கையை கழும மாந்தி***
***நீருறு செறுவில் நாறுமுடி அழுத்த நின்***
***நடுநரோடு சேறி (நற்றிணை 60)***

*என்ற பாடல் வரியில் பலமுறை நன்றாக உழப்பட்டு களை நீக்கி உரம் இட்டு நீர்பாய்ச்சப் பெற்ற வயல்களில் நாற்றுக்களை நன்றாக அழுத்தி நட்டனர் என்பதை அறிய முடிகிறது.*

**பயிர்பாதுகாப்பு**

*ஒரு நிலத்தில் ஒரு பயிரை தொடர்ந்து பயிரிடும்போது அந்நிலம் ஒரு குறிப்பிட்ட சத்துக்கள் இழந்து விடுகிறது. அவற்றை ஈடு செய்யும் பொருட்கள் விவசாயிகள் வேறு பயிரை பயிரிட்டு நிலத்தின் தன்மையை சீரான நிலைக்கு கொண்டு வருகின்றனர். இம்முறையை மாற்றி பயிர் முறைமை என்கிறோம். நெல் அறுத்த வயலில் மறுபடியும் உழுது அது ஈரமானதாய் இருக்கும் பொழுது அந்நிலத்தில் மீண்டும் பயிர் செய்வர் இதனை*

***அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்***
***மறுகால் உழுத ஈரச் செறுவின் (நற்றிணை 210)***

*என்ற அடிகள் மூலம் அறியலாம்.*

*நெல் அறுத்த வயலில் மறுபடியும் ஈர விதையை சேற்றில் மீண்டும் பயிரிடும் போது உளுந்து போன்ற மாற்றுப் பயிர்களை விதைத்தல் மரபாகவும் நிகழ்ந்துள்ளது. இதனை,*

***இரும்பணிப் பருவத்து மயிர்க்காய் உளுந்து***
***அகல் இலை அகல வீசி (நற்றிணை 29)***

*அறுவடை செய்த பயிர்களை களத்தில் இட்டு எருதுகளைக் கொண்டும் யானைகளை கொண்டும் போர் அடித்தனர் மருத நிலத்தில் எருதுகளைக் கொண்டு ஒட்டி கதிரடிப்போர் அடிப்பர் என்பதை*

***வேங்கைக் கண்ணியர் எருது எறி களமர்***
***நிலம் கண்டன்ன அகன் கண் பாசறை,***
***மென் தினை நெடும் போர் புரிமார்***
***துஞ்சு களிறு எடுப்பும் தம் பெருங் கல் நாட்டே.சு (நற்றிணை 125)***

*பண்டைய காலத்தில் உள்ளவர்கள் தாங்கள் நிலத்தில் விளைந்த நெல்லை பிறருக்கு கொடுக்கும்போது அளந்து கொடுத்துள்ளனர். வயல் எவ்வளவு விளைச்சல் தந்துள்ளது என்பதைஅறிவும் நிலை காரணமாக இவற்றின் பயன்பாடு மக்களிடையே பரவி இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. எனவே, வேளாண்மை பொருட்களின் அளவை அறியவும் அளவையைப் பயன் படுத்திக் கொண்டனர்.*

**பயிரிடப்பட்ட பயிர்கள்**

*உழவர்கள் புன்செய் நிலங்களில் திணையும் வரகையும் முக்கிய பயிராக பயிரிட்டு உள்ளனர் திணையில் சிறுத்தினை கருத்தினை செந்தினை ஆகியவற்றை பயிரிடப்பட்டதை*

***"கிளைமழி சிறுத்தினை" (நற்றிணை 25)***
***"மலை அயற் கலித்த மை ஆர் ஏனல்"***
***(நற்றிணை 108)***

*என்ற வரிகளால் அறியலாம். ஒரே பகுதியில் ஒரே நேரத்தில் பல்வேறு பயிர்களை சாகுபடி செய்யும் முறை இருந்துள்ளது.*

**தொகுப்புரை**

*தமிழர்கள் தாங்கள் படைத்த இலக்கியத்தின் வழி வேளாண்மையின் இன்றியமையாமையையும் பண்பாட்டுப் பெருமையையும் நன்கு விளக்கியுள்ளனர். தமிழ் மக்கள் இயற்கையோடு ஒன்றி நிலப் பாகுபாட்டு அமைப்பைப் பெற்ற உழவுத் தொழிலைச் செய்துள்ளனர். இயற்கையின் பருவங்களுக்கு ஏற்ப வேளாண்மை செய்ததையும் அதில் பயன் படுத்திய பல நுட்பங்களையும் இலக்கியப் பதிவுகள் மூலமாக அறிய முடிகிறது. நால்வகை நிலங்களில் ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ற தொழிலை செய்துள்ளனர். அவ்வாறு செய்து வந்தாலும் வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளனர். தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ளவேளாண்மைச்செய்திகள் நமது பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்வதையும் நம்மால் மறுக்க இயலாது.*

**துணை நின்ற நூல்கள்**

1. அருணாச்சல கவுண்டர், கு. (1997) பண்டைத் தமிழக வேளாண்மை வணிக வாரியங்கள், கழக வெளியீடு, சென்னை - 600018.
2. கிருஷ்ணமூர்த்தி, (2020) க. வேளாண்மை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், அம்பத்தூர், சென்னை 600050.
3. செல்லையா, (2011) தமிழக வேளாண்மை

நிகழ்வும் வாய்ப்பும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை 600098.

4. பாலசுப்பிரமணியன், கு. வெ. (உரையாசிரியர்) (2004) நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 600098.

5. பூரணச்சந்திரன், க. (மொ), (2014), நிலஅமைப்பும் தமிழ்க் கவிதையும் (செவ்வியல்தமிழ்க்கவிதையில் இயற்கை பற்றியதோர் ஆய்வு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.